| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.மா.கஜேந்திரன், பி.ஏ.,<br>மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்<br>பழங்குடியினர் நல அலுவலர்,<br>வேலூர். | 1 முதன்மை கல்வி அலுவலர் (CEO)<br>வேலூர் மாவட்டம்<br>2 மாவட்ட கல்வி அலுவலர் (DEOs)<br>வேலூர்/திருப்பத்தூர்/வாணியம்பாடி<br>இராணிப்பேட்டை/அரக்கோணம்<br>3 உதவி கல்வி அலுவலர் (AEO-ADW)<br>மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்<br>பழங்குடியினர் நல அலுவலகம், வேலூர்<br>4 வட்டார கல்வி அலுவலர் (BEOs)<br>ஆலங்காயம்/அணைக்கட்டு/அரக்கோணம்/<br>ஆற்காடு/குடியாத்தம்/ஜோலார்பேட்டை/கீ.வ.குப்பம்<br>/கந்திலி/கணியம்பாடி/காட்பாடி/ காவேரிபாக்கம்/<br>மாதனூர்/ நாட்றம்பள்ளி/ நெமிலி/ பேர்ணாம்பட்டு/<br>சோளிங்கர்/திருப்பத்தூர்/திமிரி/வேலூர்(புறநகர்)/<br>வேலூர் (நகர்)/வாலாஜா (கிழக்கு)/வாலாஜா(மேற்கு) |

ந.க.கே6/21564/2018 நாள்: .10.2018

அய்யா/அம்மையீர்,

பொருள்: ஆதிதிராவிடர் நலம் - 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் சுகாதாரமற்ற தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை (Unclean Occupation) – 2018-2019ஆம் கல்வியாண்டு முதல் செல்லத்தக்க திட்ட வழிகாட்டி நெறிமுறைகள் பின்பற்றுதல் -தொடர்பாக

பார்வை: இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்.ஜே4/7980/2018-1, நாள்:05.06.2018.

*****

பார்வையில் காணும் ஆதிதிராவிடர் நலத்துறை, இயக்குநர் அவர்களின் கடிதத்தில், 2018-19ஆம் கல்வியாண்டு முதல் 1 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் சுகாதாரமற்ற தொழில்புரிவோரின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை (Unclean Occupation) திட்டத்திற்கு செல்லத்தக்க திட்ட வழிகாட்டி நெறிமுறைகள் கீழ்காணும் விவரப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதியத் திட்ட வரைமுறைகளின்படி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. மனித கழிவு அகற்றுவோர் சட்டம் 2013 பிரிவு 2(1)(d) இன்படி சுகாதாரத்கேடு விளைவிக்கவல்ல துப்புரப் பணியை மேற்கொள்வதாக வரையறுக்கப்பட்ட நபர்கள்.
2. 1 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் விடுதி அல்லாது பெற்றோருடன் வசிக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பராமரிப்புப் படியினை ரூ.110/-லிருந்து 225/- ஆக நிர்ணயித்து (ஒரு ஆண்டிற்கு அதிக கால அளவு 10 மாதங்கள்) வழங்கவும், இத்துடன் சிறப்புப் படியாக ரூ.750/- (adhoc grant) வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.
3. 3 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் விடுதியில் வசிக்கும் குழந்தைகளுக்கு பராமரிப்புப் படி ரூ.700/- ஆக நிர்ணயித்து (ஒரு ஆண்டிற்கு அதிக கால அளவு 10 மாதங்கள்) வழங்கவும், இத்துடன் சிறப்புப் படியாக ரூ.1000/- (adhoc grant) வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.
4. இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்த தேசிய சபாய் கரம் சாரி நிதி மற்றும் வளர்ச்சி கழகம் (National Safai Karmcharis Finanace and Development Corporation) மத்திய / மாநில நிர்வாகங்களுக்கிடையில் ஒருங்கிணைக்கும் முகமையாக (Coordinating Agency) செயல்படும்.

5. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளை தனித்து அடையாளப்படுத்த ஆதார் எண், ஆதார் சட்டம் 2016 பிரிவு 7 இன்படி பயன்படுத்தப்பட வேண்டும். ஆதார் அடையாள எண் இல்லாத பயனாளிகளுக்கு மட்டும் ஏற்றுக்கொள்ளத்தக்க மாற்று அடையாள வழிமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

6. சுகாதார தொழில் செய்வோரின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் பின்வரும் தொழில்களை மேற்கொள்வோர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்டும்.

    1. மனித கழிவு அகற்றுவோர் சட்டம் 2013 பிரிவு 2(1) (g) இன்படி மனித கழிவை அகற்றுவதாக வரையறுக்கப்பட்ட நபர்கள்.
    2. தோல் உரிப்பவர்/ தோல் பதனிடுபவர்
    3. குப்பை பொறுக்குபவர்
    4. மனித கழிவு அகற்றுவோர் சட்டம் 2013 பிரிவு 2(1) (d) இன்படி சுகாதாரக்கேடு விளைவிக்கவல்ல துப்புரவுப் பணியை மேற்கொள்வதாக வரையறுக்கப்பட்ட நபர்கள்.

ஆகவே புதிய திட்ட வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி 2018-2019ம் கல்வியாண்டு முதல் தொடர்புடைய பள்ளிகளில் பயிலும் சுகாதார தொழில் புரிவோரின் மாணாக்கர்களின் விண்ணப்பங்களை இவ்வலுவலகத்தில் வழங்குவதற்கு அனைத்து அரசு/அரசு உதவி பெறும்/ தனியார் உயர்நிலை/ மேனிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் வட்டார கல்வி அலுவலர் அவர்களுக்கும் அறிவுறுத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

8/10/18

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்,
வேலூர்.

<u>நகல்:</u>

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

8/10/18